# ஹென்றி பார்க் தொடக்கப்பள்ளி

## தொடக்கநிலை 2

## 2024



# தமிழ்மொழிக் கல்வியின் இலக்கு

**சிங்கப்பூர் மாணவர்களிடையே தமிழை வாழும் மொழியாக்குதல்**

- சிங்கப்பூரில் தமிழை வாழும் மொழியாக்குவதற்குத் தமிழ் பயிலும் மாணவர்கள் ஒருவரோடு ஒருவர் தயக்கமின்றிச் சரளமாகத் தமிழில் உரையாடத் தேவையான மொழியாற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

- அவர்கள் தமிழில் தயக்கமின்றிக் கருத்தைப் பரிமாறிக்கொள்ளும் திறனையும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.



# தமிழ்மொழி கற்றல் கற்பித்தலின் நோக்கங்கள்

**கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய அடிப்படை மொழித்திறன்களோடு இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களிலும் மாணவர்களுக்குப் பயிற்சியளித்தல்.**

- மாணவர்கள் தம் மனத்தில் எழும் கருத்துகளைத் தன்னம்பிக்கையுடன் பேச்சுவழியாகவும் எழுத்துவழியாகவும் வெளிப்படுத்தும் ஆற்றலைப் பெறச் செய்தல்.

- அதற்காகக் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய அடிப்படை மொழித்திறன்களோடு 21-ஆம் நூற்றாண்டிற்குத் தேவையான முக்கியத் திறன்களாகிய இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களும் இப்பாடத்திட்டத்தில் வலியுறுத்தப்படுகின்றன.



# மொழித்திறன்கள்

- மொழி கற்றலில் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய நான்கும் அடிப்படை மொழித்திறன்களாகும்.

- தொடக்கநிலை மாணவர்களுக்கு இந்த நான்கு மொழித்திறன்களிலும் வலுவான அடித்தளம் இருப்பது அவசியம்.

- இத்திறன்கள் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை.

- கேட்டல் படித்தல் – இவை செய்திகளையும் கருத்துகளையும் அறிந்துகொள்ள உதவுகின்றன.

- பேசுதல் எழுதுதல் – இவை கருத்துகளை வெளிப்படுத்த உதவுகின்றன.



# கேட்டலும் நோக்கலும்

- கேட்டல் திறனே நான்கு அடிப்படைத்திறன்களுள் முதன்மையானது.

- ஒலிகளைச் சரியாகக் கேட்டுச் சரியாக ஒலிக்கும்போது பேசுதல் எளிமையாகும்.

- நோக்கல் என்னும் காட்சிவழியாகவும் இத்திறன்கள் வலியுறுத்தப்படுகின்றன.

- காட்சிவழியாகக் கேட்டல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்போது மாணவர்கள் தாம் கேட்டவற்றையும் பார்த்தவற்றையும் தம் முன்னறிவோடு தொடர்புபடுத்தி எளிதில் கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபடுவர்.



# பேசுதல்

- ஒரு மொழிக்கு அடிப்படையானது பேச்சுதான். பேசப்படும் மொழிக்கே நீடித்த வாழ்வுண்டு.

- மாணவர்களின் மொழித்திறன்களுக்கு ஏற்ப அவர்களுக்குப் பேச்சுத்தமிழில் போதிய பயிற்சியும் பேசிப் பழகுவதற்குரிய சூழல்களும் வாய்ப்புகளும் உருவாக்கித் தரப்படுகின்றன.

- மாணவர்கள் பல்வேறு சூழல்களில் தெளிவாகவும் சரளமாகவும் தன்னம்பிக்கையுடனும் பேச்சுத்தமிழிலும் எழுத்துத்தமிழிலும் பேசிப் பயிற்சிபெற வாய்ப்புகள் தரப்படுகின்றன.



# படித்தல்

- ஒரு மொழியைத் தன்னம்பிக்கையுடன் பேசவும் எழுதவும் அம்மொழியில் சொல்வளத்தைப் பெருக்கிக்கொள்ளவும் படித்தல் திறன் அவசியாகும்.

- எழுத்துகளைக் கண்ணால் பார்த்து வாயால் உச்சரித்துப் பொருள் உணர்வதே வாய்விட்டுப் படித்தல்.

- வாய்விட்டுப் படித்தல் சரியான உச்சரிப்பு, குரல் ஏற்ற இறக்கம், தெளிவு, சரளம் முதலியவற்றைச் செம்மைப்படுத்த உதவும்.



# எழுதுதல்

- கேட்டல், படித்தல் ஆகியவற்றின்மூலம் தாங்கள் அறிந்துகொண்ட சொற்களையும் தொடர்களையும் தேவைக்கேற்ப எழுத்து வடிவில் வெளிப்படுத்துவதே எழுதுதல் ஆகும்.

- தொடக்கநிலையில் எழுத்துகளின் வரிவடிவங்களைக் கற்பித்தலே எழுதுதலின் முதல் படிநிலையாகும்.

- எல்லாத் தமிழ் எழுத்துகளையும் படிக்கவும் எழுதவும் அறிந்துகொள்ளும் மாணவர்கள் சொற்களையும் சொற்றொடர்களையும் வாக்கியங்களாக எழுதப் பயிற்சி பெறுவர்.



# இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்கள்

- இருவர் அல்லது அதற்கும் மேற்பட்டவர்களிடையே நடைபெறும் கருத்துப்பகிர்வே இருவழிக் கருத்துப்பரிமாற்றமாகும்.

- மாணவர்கள் தாய்மொழியை இயல்பான வாழ்க்கைச் சூழல்களில் பயன்மிக்க வகையில் பயன்படுத்த இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்கள் அவசியமாகின்றன.

- எல்லாத் தமிழ் எழுத்துகளையும் படிக்கவும் எழுதவும் அறிந்துகொள்ளும் மாணவர்கள் சொற்களையும் சொற்றொடர்களையும் வாக்கியங்களாக எழுதப் பயிற்சி பெறுவர்.



# தமிழ்மொழியைச் சிறப்பாகக் கற்க

- எண்ணங்களையும் கருத்துகளையும் மற்றவருடன் முறையாகப் பரிமாறிக்கொள்ள மொழி பயன்பட வேண்டும்.

- மாணவர்கள் தமிழைப் பள்ளியிலும் பள்ளிக்கு வெளியிலும் தன்னம்பிக்கையோடு பயன்படுத்தும்போதுதான் அவர்கள் மொழியாற்றல் மிக்கவர்களாகத் திகழ முடியும்.

- கருத்துப்பரிமாற்றம் முதலில் பேச்சுமூலமே வெளிப்பட வேண்டும். பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத் திறனை மேம்படுத்தப் பேச்சுத்தமிழ் பயன்படுகிறது.

- பேச்சில் திறன் பெற்ற பிறகே, எழுத்தின்வழி ஒருவரால் எளிதில் கருத்துப்பரிமாற்றம் செய்ய இயலும்.



# தமிழ்மொழியைச் சிறப்பாகக் கற்க

- பெரிய புத்தகங்கள், சிறுவர் கதைநூல்கள், படக்கதைகள் ஆகியவற்றின்வழி விழுமியங்களும் இருபத்தோராம் நூற்றாண்டுத் திறன்களும் வளர்க்கப்படும்.

- உற்சாகமிக்க கற்றல் சூழலை உருவாக்கவும் கருத்துப் பரிமாற்றத்தில் பிள்ளைகள் ஈடுபடவும் பட அட்டைகள், மின்னட்டைகள் முதலிய வளங்களும் பயன்படுத்தப்படும்.

- பிள்ளைகளின் மொழி வளத்தை மேம்படுத்தவும் மொழியின் மேல் ஆர்வத்தை ஏற்படுத்தவும் பல மொழி விளையாட்டுகள் பயன்படுத்தப்படுகின்றன.



# தமிழ்மொழியை மாணவர்களிடம் கொண்டு சேர்க்க பெற்றோரின் பங்கு


- வீட்டில் பிள்ளைகளுடன் தமிழில் உரையாடுங்கள்.
- எளிமையான கதை புத்தகங்களையும் செய்திகளையும் படித்துக் காட்டுங்கள்.
- வீட்டிலும் வெளியில் செல்லும் போதும் பார்க்கும் பொருட்களின் பெயர்களைத் தமிழில் எப்படிச் சொல்வது என்று கூறுங்கள்.
- தொலைக்காட்சியில் இடம்பெறும் சிறுவர் நிகழ்ச்சிகளைக் காண ஊக்குவிக்கலாம்.



# SLS – கற்றலுக்குப் பயன்படுத்தப்படும் கற்றல் தளம்

**SLS**

https://vle.learning.moe.edu.sg/login






# தமிழுக்கு அமுதென்று பேர்!

